# பொள்ளாச்சி கொடூரமும் - எடப்பாடியின் கையாலாகாத் தனமும்..!

❖ "அ.தி.மு.க.வின் பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி" என நமது முதலமைச்சர் பலமுறை கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட கொடூர சம்பவம் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்தது.

❖ 2019 மக்களவைத் தேர்தலின்போதும் 2021 சட்டப்பேரவை தேர்தலின்போதும் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவோம் என அளித்த வாக்குறுதி நிறைவேறி இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

❖ அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து பாதாளத்தில் ஊர்ந்து கிடந்ததற்கு மாபெரும் சாட்சியாக இன்றைக்கு தீர்ப்பு வெளியாகியுள்ள பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கு இருந்தது.

இது மட்டுமின்றி, தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் 13 பேரை சுட்டுக்கொன்றது, சாத்தான்குளத்தில் தந்தை-மகன் இருவரை லாக்கப்பில் வைத்து அடித்தே கொன்றது, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பயன்படுத்திய முகாம் அலுவலகமான கொடநாடு பங்களாவில் நடந்த கொலை-கொள்ளை ஆகியவையும் அ.தி.மு.க. ஆட்சியின் சட்டம் ஒழுங்கை காட்டும் காலக்கண்ணாடியாக காலம் கடந்து நிற்கும்.

அ.தி.மு.க. அவல ஆட்சிக்கு சாட்சியாக சட்டம் ஒழுங்கு சீர்குலைவு பிரதிபலித்ததால் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க., மக்கள்மன்றத்திலும் சட்டமன்றத்திலும் தொடர்ந்து போராடியது. பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சபரிராஜன், திருநாவுக்கரசு, சதீஷ், வசந்த குமார், மணிவண்ணன், பாபு, ஹெரன் பாலு, அருளானந்தம், அருண்குமார் ஆகிய 9 பேருக்கும் சாகும்வரை ஆயுள் தண்டனையை நீதிபதி நந்தினி தேவி விதித்துள்ளார்.

குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட ஏ2 திருநாவுக்கரசு, ஏ8 அருளானந்தம் ஆகிய இருவரும் நேரடியாக அ.தி.மு.க.வில் பதவி வகித்தவர்கள். இன்றைய தீர்ப்பு உணர்த்துவது, பொள்ளாச்சி பகுதியில் பெண்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் வகையில் அலங்கோல ஆட்சியை நடத்திய எடப்பாடி பழனிச்சாமிக்கு அவமானம். முதலமைச்சர் சுட்டிக்காட்டியது போல பெண்களுக்கு பாதுகாப்பற்ற அவல ஆட்சியை நடத்திய எடப்பாடி வெட்கி தலைகுனிய வேண்டிய தீர்ப்பு இது. 2021ம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்ததால் 48 ஆட்சிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டது. இதனால் பிறழ் சாட்சிகள் எதுவும் இல்லாமல் வழக்கு விசாரணை தடையின்றி நடைபெற்று 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள்தண்டனை விதிக்கும் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்திருந்தால் சாட்சிகள் மிரட்டப்பட்டு பிறழ் சாட்சிகள் உருவாக்கப்பட்டு இந்த தீர்ப்பு சாத்தியமில்லாமல் போயிருக்கலாம். 7 ஆண்டுகளாக நடைபெற்ற பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் 200க்கும் மேற்பட்ட பெண்கள் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளிவந்தன. அந்த 7 ஆண்டுகளும் அ.தி.மு.க. ஆட்சியே நடைபெற்றது. பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் அ.தி.மு.க. தொடர்புடைய பலர் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியால் தப்பவிடப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் தற்போதும் மக்கள் மனதில் நிலவுகிறது. கொஞ்சமும் கூச்சமே இல்லாமல் சிபிஐக்கு வழக்கை மாற்றி அதிமுக அரசு மேற்கொண்ட நடவடிக்கையே இந்த தீர்ப்புக்கு காரணம் என அதிமுக சார்பில் வெளியிட்ட டிவிட்டர் பதிவில் கூறப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தி.மு.க. ஆட்சியில் சி.பி.சி.ஐ.டி விசாரணை நடைபெற்றால் தாங்கள் பாதுகாத்த குற்றவாளிகளை தி.மு.க. அரசு அம்பலப்படுத்திவிடும் என்கிற எண்ணத்தில்கூட இந்த வழக்கை எடப்பாடி பழனிசாமி அரசு அவசர அவசரமாக சி.பி.ஐ.க்கு மாற்றியிருக்கலாம் என்ற சந்தேகம் இப்போதும் மக்கள் மத்தியில் எழுகிறது. நூற்றுக்கணக்கான பெண்கள் பாதிக்கப்பட்டதாக புகார் எழுந்த பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் நேரடி குற்றவாளிகள் 9 பேருக்கும் தண்டனை கிடைத்திருப்பதை தி.மு.க. வரவேற்கிறது. அதே நேரத்தில் 7 ஆண்டுகளாக இந்த குற்றம் தொடர் சங்கிலிபோல நடந்ததாக அப்பகுதி மக்கள் கூறினார்கள். எனவே, 7 ஆண்டுகளும் குற்றம் காவல்துறைக்கோ அல்லது மாவட்ட நிர்வாகத்திற்கோ தெரியாமல் இருந்திருக்குமா? அப்படி தெரியாமல் குற்றத்தை மூடிமறைக்க முயன்ற அரசியல் அதிகாரம் படைத்தவர்கள் யார்?, குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யாமல் தாமதம் செய்து காப்பாற்ற முயன்ற ஆட்சியாளர்கள் யார் என்பது மக்களுக்கு தெரியும்.

**பாலியல் குற்றவாளிகளை பாதுகாத்த எடப்பாடி அரசு!**

அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு புகார் அளித்த பெண்ணின் பெயரை கோவை மாவட்ட எஸ்.பி. பாண்டியராஜன் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் பகிரங்கமாகவே கூறினார். கோவை மாவட்ட எஸ்.பி வாய்தவறி கூறவில்லை குற்றவாளிகளை பாதுகாக்கும் நோக்கத்துடனேயே அப்படி கூறியிருக்கிறார் என்பதை பொள்ளாச்சி பாலியல் வழக்கு தொடர்பாக கோவை மாவட்ட காவல்துறை வெளியிட்ட அறிக்கைகளே அம்பலப்படுத்திவிட்டது. இரண்டு அறிக்கைகளில் புகார் அளித்த பெண்ணின் பெயர் மற்றும் முகவரி உள்ளிட்ட விபரங்களை பதிவிட்டிருந்தது காவல்துறை. எல்லாவற்றுக்கும் மேலாக பொள்ளாச்சி பாலியல் வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு ஒப்படைப்பது குறித்து எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு வெளியிட்ட அரசாணையிலேயே பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர் உள்ளிட்ட விபரங்கள் பகிரங்கமாக குறிப்பிடப்பட்டிருந்தன.

பாதிக்கப்பட்ட பெண்ணின் விபரங்களை உச்சநீதிமன்ற உத்தரவை மீறி அரசாணையில் குறிப்பிட்ட எடப்பாடி பழனிசாமி அரசுக்கும், புகார் அளித்த பெண்ணின் விபரங்களை கூறிய மாவட்ட எஸ்.பி.பாண்டியராஜனுக்கும் கடும் கண்டனம் தெரிவித்தது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை. அடையாளங்கள் வெளியிடப்பட்டதால் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நிவாரணமாக எடப்பாடி பழனிசாமி அரசு 25 லட்ச ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டது உயர்நீதிமன்ற மதுரை கிளை. எஸ்.பி.பாண்டியராஜன் செய்தியாளர்களை சந்திக்கும்போது அ.தி.மு.க. வாரிசுகளுக்கு இந்த பாலியல் வழக்கில் தொடர்பு இருப்பதாக வரும் தகவல்கள் குறித்து செய்தியாளர்கள் கேட்டனர். வழக்கின் விசாரணை ஆரம்ப கட்டத்தில் இருக்கும் நிலையில், "அ.தி.மு.க. பிரமுகர்களின் வாரிசுகளுக்கு 100 சதவீதம் தொடர்பு இல்லை" என அதிமுகவின் மாவட்டச் செயலாளர் போல் பேட்டியளித்தார் காவல்துறை எஸ்.பி.

இன்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் 9 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் கடந்த 2019ம் ஆண்டு மார்ச் 11ம் தேதி கோவை மாவட்ட எஸ்.பி. அளித்த பேட்டியில் இந்த வழக்கில் 4 பேரை தவிர வேறு யாருக்கும் தொடர்பு இல்லை என திட்டவட்டமாக கூறினார். விசாரணை ஆரம்பக்கட்டத்தில் இருக்கும்போது 4 பேரை தவிர வேறு யாருக்கும் பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தொடர்பு இல்லை எனக் கூறியதற்காக எஸ்.பி. பாண்டியராஜன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசுக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டது. செய்தியாளர் கேள்வி கேட்கும் போது அ.தி.மு.க. பிரமுகர்களின் வாரிசுகளுக்கு இதில் தொடர்பு இருக்கிறதா என்று மட்டுமே கேட்டனர். பொள்ளாச்சி ஜெயராமன் குறித்து கேட்கவில்லை. ஆனால் எங்க அப்பன் குதிருக்குள் இல்லை என்று கூறுவது போல, தமது பொள்ளாச்சி தொகுதியில் இந்த சம்பவம் நடந்திருப்பதால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியவரே அவர்தான் எனக் கூறி பொள்ளாச்சி ஜெயராமனுக்கு வக்காலத்து வாங்குவது போல தாமாக முன்வந்து எஸ்.பி. பாண்டியராஜன் கூறியது சந்தேகத்தை வலுப்படுத்தியது.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

**குற்றவாளிக் கூடாரத்தை கைது செய்ததா அ.தி.மு.க. அரசு?**

"பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிக் கூடாரத்தை கைது செய்தது எனது அரசு" என கூறுவதன் மூலம் பச்சைப் பொய் பழனிசாமி என்று எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடுத்த பட்டத்திற்கு ஏற்றவர் என நிரூபித்துள்ளார். பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கை பொறுத்தவரை, புகார் கொடுத்த பெண் குறித்த தகவலை பார் நாகராஜனிடம் கொடுத்து மிரட்டல் விடுத்த ஆடியோ வெளியானது. பார் நாகராஜன் அ.தி.மு.க. நிர்வாகி. அவர் மீது பெண்ணை மிரட்டியது என்ற பிரிவில் மட்டும் வழக்கு பதிந்து பிறகு ஜாமின் வழங்கியது எடப்பாடி அரசு. இளம்பெண்கள் கதறல் சப்தத்துடன் கூடிய வீடியோ வெளியானதால் மக்களும் மாணவர்களும் தன்னெழுச்சியாக போராடினார்கள். தமிழ்நாடு முழுவதும் அரசியல் கட்சிகள் மட்டுமின்றி பல்வேறு அமைப்பினரும், பொதுமக்களும் அ.தி.மு.க. அரசுக்கு எதிராக போராடினார்கள். பொள்ளாச்சியில் அந்த பகுதி மக்கள் 1000க்கும் மேற்பட்டோர் திரண்டு மனித சங்கிலி போராட்டம் நடத்தினர். அதன் பிறகே முதலில் 4 பேரை மட்டுமே மாநில போலீஸ் கைது செய்தது.

புகார் 2019ம் ஆண்டு மார்ச் மாதத்தில் எழுந்த நிலையில், இரண்டு ஆண்டுகளுக்கு பிறகே 2021 ஜனவரி 6ம் தேதி சி.பி.ஐ., அ.தி.மு.க. நிர்வாகிகள் அருளானந்தம், ஹரோம் பால், பாபு ஆகியோரை கைது செய்தது. பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கார் அ.தி.மு.க. கவுன்சிலர் ஜேம்ஸ் ராஜா என்பவருக்கு சொந்தமானது என்பதை கண்டறிந்து சி.பி.ஐ. பறிமுதல் செய்தது. எனவே, எடப்பாடி பழனிசாமி ஆட்சி பாலியல் வன்கொடுமை வழக்கை மூடிமறைக்கவே முயன்றது. அதற்கு காரணம் அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கும் குற்றத்தில் தொடர்பு இருந்தது. தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும், பல்வேறு அமைப்பினரும் பொதுமக்களும், மாணவர்களும் போராடி அழுத்தம் தந்த பிறகே அ.தி.மு.க. நிர்வாகிகள் 3 பேரை தவிர சிலரை மட்டுமே கைது செய்தது என்பதே உண்மை

**பொள்ளாச்சி வழக்கும்....**
**அண்ணா பல்கலைக் கழக வழக்கும்...**

உலகமே கேட்டு அதிர்ந்த பொள்ளாச்சி வழக்கில் தீர்ப்பு வெளியானதும் இப்படிப்பட்ட பெரும் கொடுமை பெண்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் நடந்ததை எண்ணி வெட்கி தலைகுனியாமல், அவமானத்தால் மனம் நோகாமல் அ.தி.மு.க.வினரால் எப்படி பேச முடிகிறது என்பது வியப்பானது தான். பொள்ளாச்சி பகுதியில் 7 ஆண்டுகளாக 100க்கும் மேற்பட்ட பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு வீடியோ எடுத்த வழக்கையும், அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் மாணவியை ஞானசேகரன் என்ற கயவன் மிரட்டி பாலியல் தொந்தரவு செய்ததையும் அதிமுகவினர் ஒப்பிட்டு பேசுவது அவர்களின் மனம் இன்னும் பொள்ளாச்சி வழக்கை சாதாரணமாக எடுத்துக்கொள்கிறது என்பதை காட்டுகிறது. அ.தி.மு.க. நிர்வாகிகள் சம்மந்தப்பட்ட பொள்ளாச்சி சம்பவத்தை அ.தி.மு.க. அரசு அணுகியதற்கும், அண்ணா பல்கலைக் கழக மாணவி விவகாரத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

* அண்ணா பல்கலைக் கழக விவகாரத்தில் புகார் கொடுக்கப்பட்ட 5 மணி நேரத்தில் ஞானசேகரன் என்ற குற்றவாளி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். குற்றவாளி மீது குண்டர் தடுப்புச் சட்டம் பதியப்பட்டது.

பொள்ளாச்சி வழக்கில் திருநாவுக்கரசு மற்றும் சபரீராஜன் மீது போடப்பட்டிருந்த குண்டர் தடுப்புச் சட்டம் நவம்பர் மாதம் ரத்து செய்யப்பட்டது. குண்டர் தடுப்புச் சட்டத்தை அ.தி.மு.க. அரசு முறையாக பதிவு செய்யாதது தான் காரணம்.

ஆனால், ஞானசேகரன் இன்றும் குண்டர் தடுப்புச் சட்டத்தில் இருந்து வெளியில் வர முடியாத நிலைமை தான் உள்ளது. அண்ணா பல்கலைக் கழக வளாக பாலியல் வழக்கில் ஞானசேகரனை, புகார் அளித்த 24 மணி நேரத்தில் கைது செய்தது காவல்துறை. பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை தொடர்பாக கடந்த 2019ம் ஆண்டு பிப்ரவரி 12ம் தேதியே பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுத்த நிலையில் 12 நாட்கள் கழித்து பிப்ரவரி 2ம் தேதிதான் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

பெண்களுக்கு பாதுகாப்பான ஆட்சி தி.மு.க. ஆட்சி என்பது பொள்ளாச்சி பாலியல் வழக்கு விசாரணையையும், அண்ணா பல்கலைக்கழக வளாக பாலியல் வழக்கு விசாரணையையும் ஒப்பிட்டு பார்த்தாலே தெரிந்துவிடும். அண்ணா பல்கலைக் கழக மாணவி விவரம் வெளியானது தொழில்நுட்ப கோளாறு மட்டுமே காரணம். அண்ணா பல்கலைக் கழக மாணவி விவகாரத்தில் IPC -இல் இருந்து BNS -க்கு மாறும் பிரச்சினையால் மற்றவர் பார்க்கும் நிலை ஏற்பட்டது. இதை NIC-யே கூறிய பிறகும் தி.மு.க. அரசு மீது களங்கத்தை கற்பிக்க முயன்றது அ.தி.மு.க. NIC விளக்கம் அளித்து பல மாதங்கள் கழிந்துவிட்டன. அரசு தரப்பில் இருந்தோ, காவல்துறை தரப்பில் இருந்தோ மாணவியின் விவரங்கள் வெளியிடப்பட்டன என்பது எங்கும் நிரூபிக்கப்படவில்லை.

**பொள்ளாச்சி பாலியல் குற்றங்களில் முக்கிய தொடர்புடைய அ.தி.மு.க. பிரமுகர் பார் நாகராஜ்!**

அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பொள்ளாச்சி ஜெயராமனின் மகனோடு நெருங்கிய தொடர்புடையவராக கருதப்பட்ட அவரை வெறும் அடிதடி வழக்கோடு அ.தி.மு.க. அரசு காப்பாற்றியதற்கு பின்னால் பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்ணின் சகோதரரை மிரட்டியதாக அடிதடி வழக்கில் கைது செய்யப்பட்ட மணிவண்ணன், பாபு ஆகியோர் கூட்டு பாலியல் வழக்கிலும் பின்னர் சேர்க்கப்பட்டனர். ஆனால் பார் நாகராஜ் மட்டும் அடிதடி வழக்கோடு நிறுத்திக்கொள்ளப்பட்டார்.

தான் விசாரணை வளையத்திற்குள் சிக்கியதும் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் சபரிராஜன் ஏற்கனவே ஆபாச வீடியோ எடுத்தது மிரட்டியது தமக்கு தெரியும் என்று கூறியிருக்கிறார். ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணின் வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருப்பதற்காக இதனை வெளியே சொல்லாமல் இருந்ததாகவும், அந்த ஆபாச வீடியோவை சபரிராஜனை டெலிட் செய்ய வைத்ததாகவும் கூறினார். பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை அதிமுக வட்டாரத்தில் முன்பே தெரிந்திருந்தும் ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாமல் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு பார் நாகராஜினின் ஒப்புதல் வாக்குமூலமே முக்கிய சாட்சி.

**அரசியல் பிரமுகர்களுடன் புகைப்படமும் குற்றம்சாட்டப்பட்டவர்களும்!**

அண்ணா பல்கலைக்கழக பாலியல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஞானசேகரன் தி.மு.க. பிரமுகர்களோடு இருந்த புகைப்படங்களை வைத்து வைத்துக்கொண்டு எடப்பாடி பழனிசாமி விமர்சிக்கிறார். பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பொள்ளாச்சி ஜெயராமன், எஸ்.பி.வேலுமணியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் வெளியானபோது, அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்த எடப்பாடி பழனிசாமி உத்தரவிடாதது ஏன்? பொள்ளாச்சி பாலியல் வழக்கு விஸ்ரூபம் எடுப்பதற்கு முன்பு வரை பாலியல் குற்றவாளிகளான அருளானந்தத்திற்கு பொள்ளாச்சி நகர மாணவரணி செயலாளர் பதவியும், பார் நாகராஜ்க்கு அம்மா பேரவை செயலாளர் பதவியும் வழங்கி அழகு பார்த்தது எடப்பாடி பழனிசாமிதானே.




தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 32வது வட்ட திமுக சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மாநகரத் துணைச் செயலாளர் மேயர் க.வசந்தகுமாரி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் இளம்சுருதி, தலைமை கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், தலைமை கழக இளம் பேச்சாளர் ச.பேரசன், பகுதி கழகச் செயலாளர், மண்டல குழு தலைவர்கள் டி. காமராஜ், எஸ்.இந்திரன், மாமன்ற டி.ஆர்.கோபி, கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிகுமார், ரமணி ஆதிமூலம், செ.சுரேஷ், லிங்கேஸ்வரி பாபு, எல்.பெரியநாயகம், பி.ஜோதிகுமார், இரா.ரத்தினகுமார், இரா. செல்வகுமார், இரா.விஜயகுமார், ஆர்.செல்வகுமார், ஆர்.ஜிவன். வி.முனுசாமி, சா.ராஜேஷ், வி.கார்த்திக், சிவாசுப்பரமணியன், சீனிவாசகுமார், சரவணன், மற்றும் கழக முன்னோடிகளும் கலந்து கொண்டனர். வட்ட கழக செயலாளர் இ.கமலகண்ணன் நன்றி தெரிவித்தார்.

## நே. சிற்றரசு தலைமையில் – 113 'அ' வட்டம்

# க.முருகன் இல்ல மணவிழா வரவேற்பு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாழ்த்து!

*சென்னை, மே 16-*

*சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 113 (அ) வட்டக் கழகப் பொருளாளர் க.முருகன் - மஞ்சுளா முருகன் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழா நாளை (17.05.2025, சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு தி.நகர், அபிபுல்லா சாலையில் உள்ள பசும்பொன் தேவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*சென்னை மேற்கு மாவட்ட செயலாளர், சென்னை மாநகராட்சி பணிக்குழு தலைவர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.*

*மாநில மருத்துவ அணி செயலாளர் நா.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, 113 'அ' வட்டச் செயலாளர் த.தேவராஜ் ஆகியோர் வரவேற்புரை யாற்றுகின்றனர்.*

*கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி., அன்பகம் கலை, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., கே.ஏழுமலை, பூச்சி எஸ்.முருகன், ஜெ.கருணாநிதி, ஏ.வி.எம். பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., வினோத் வேலாயுதம், வே.கௌதமன், கலை கதிரவன், கார்த்தி மோகன், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, துபாய் வி.ஆர். விஜய், பா.பிரகாண், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, நுங்கை வி.எஸ்.ராஜ், கோ.ரவி, மு. வெங்கடேசன், பி.ஆர்.திருமலை, மாவட்ட கழக நிர்வாகிகள், வட்ட கிளை நிர்வாகிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.*

## திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு!

*திருவள்ளூர் மே 16*

*திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் 18-05-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது*



*இக்கூட்டத்தில் தமிழ்நாடு சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறார். இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ இ.ஏ.பி. சிவாஜி, பி. ஜெ. மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு. கதிரவன், கே.வி.ஜி. உமாம கேஸ்வரி, எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், கே. சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ. குணசேக ரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதய சூரியன், ஏ. கே.சுரேஷ், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே. ஆனந்தகுமார், டி.கே.சந்திர சேகர், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், ஜான் பொன்னுசாமி, ந.பரிமளம், கா.சு. ஜெகதீசன், மு.முரளி தரன், ஜி.ரவிக்குமார், இரா. அறிவழகன், அபிராமிகுமர வேல், பி.முத்து, க.சு.தமிழ உதயன், ஆகியோர் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்*

*பொருள் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் BLA 2 பாக முகவர்கள் கூட்டம் நடத்துவது குறித்து*

*கழக ஆக்கப் பணிகள்*

*இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கையின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறார்.*



விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி 129வது வார்டு மாமன்ற உறுப்பினர் மு.ரவிசங்கர் (எ) ராசா 2024–2025 வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் 1. ஆற்காடு சாலை பரமோஷ்வர் குடியிருப்பு முன்பு உள்ள பூங்கா, 2. சாலிகிராமம் ஜெயின் ஸ்வார்ணகமல் பூங்கா, 3. சாலிகிராமம் வேலாயுதம் காலனி பூங்கா, 4. முத்துகுமாரப்ப தெரு மெஜஸ்டிக் காலனி பூங்கா, ஆகிய 4 பணிகளை மாநகராட்சி பூங்காகளிலும் நடைப்பயிற்சி மேடை மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை ஏ. எம். வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ., க.தனசேகரன்எம்.சி., பகுதி செயலாளர் கே. கண்ணன் எம்.சி. ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் பொன் வரலோகு எம்.சி., ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா, மற்றும் வட்ட கழக செயலாளர் ஆர். பாபு, எஸ். பாஸ்கர், எஸ். மைக்கேல், மு. கோவிந்தராஜன், வி.ஏ. ராஜா மற்றும் பலர் உள்ளனர்.